**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06012021-4180

Volume: 6

Issue: 1

Month: July

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 27.04.2021

Accepted: 02.06.2021

Published: 01.07.2021

Citation:
Nagarathinam, K. "Charity Literatures Are Friendly in the Way of Life." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 1, 2021, pp. 95–101.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i1.4180

*Corresponding Author:
nithyadharanis@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Charity Literatures are Friendly in the Way of Life

**K. Nagarathinam**
*Full-time Research Scholar (Tamil)*
*Government Arts College, Udumalaipettai*

**Abstract -** Whatever the virtues that man should follow, there is more to friendship than that. The way of literature shows that friendship is one of the essential traits in life. From antiquity to the present day the majority of literature has been subject to friendship. The fact that one cannot run without friendship is evident when one sees what one says better and deeper. The purpose of this article is to explore the importance of friendship in the context of life and to try to create an understanding of friendship in society.

**Key Words:** Tamil literature, Ethical literature, Virtue, Friendship, Literature, Biology, Relationship, Values, Community

**References**

1. Subramanian S.V. (2012). *Thirukadigam*, P.01, *Pathinen Keelkanakku Noolgal Moolamum Thelivuraiyum*, Manickavasagar Pathipagam.
2. Ibid., Aasarakkovai, P. 01.
3. Varadharasanar. mu. (1959). *Thirukkural Thelivurai*, Kural-784, Kazhaka Veliyedu.
4. Ragupathi, *Ilakiya Vanil Pakthi Malargal*, P. 140.
5. Kurunathan, *Purananuru Oru Parvai*, P. 140.
6. Varatharasanar. mu. (1959). *Thirukkural Thelivurai*, Kural- 381, Kazhaka Veliyedu.
7. Subramanian S.V. (2012). Elathi, P. 47, *Pathinen Keelkanakku Noolgal Moolamum Thelivuraiyum*, Manickavasagar Pathipagam.
8. Ibid., P. 58.
9. Varadharasanar. mu. (1959). *Thirukkural Thelivurai*, Kural-786, Kazhaka Veliyedu.
10. Subramanian S.V. (2012). Asarakkovai, P. 54, *Pathinen Keelkanakku Noolgal Moolamum Thelivuraiyum*. Manickavasagar Pathipagam.
11. Ibid., Trikadugam P.64:1.
12. Ibid., Elathi-33: 2.
13. Akalangan, (1996). *Kondrai Venthan*, P.47, Hindu Mamandram, Vavuniya.
14. Sangupulavar. T. (1965). *Kuselopakiyanam*. P.624, Thirunelveli, Theninthiya Saiva Sithanantha Noorpathippu Kalazham.
15. Subramanian S.V., S.V. (2012). *Thirukadigam*, P.63, Pathinen Keelkanakku Noolgal Moolamum Thelivuraiyum, Manickavasagar Pathipagam.
16. Ibid., P.86.
17. Manikkam, A. (1987). Villiparatham, Pathinezham Sarukkam, P.240, Vardhamanan Pathipagam.

# அற இலக்கியங்கள் வழி வாழ்வியல் நிலைப்பாட்டில் நட்பு

***கி. நாகரத்தினம்***
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர் (தமிழ்)
அரசு கலைக் கல்லூரி
உடுமலைப்பேட்டை

***ஆய்வுச்சுருக்கம்***

*மனிதன் பின்பற்ற வேண்டிய அறங்கள் எதுவாகினும் அதில் நட்பு அதிகளவு இடம் பெற்றுள்ளது. வாழ்வை இயக்கும் அறக்கூறுகளில் நட்பில் கடைபிடிக்கும் நட்பறங்களும் இன்றியமையாத பண்பாக இருந்துள்ளமையை இலக்கியங்களின் வழி அறிய முடிகிறது. ஆதிகாலந்தொட்டு இன்றுவரை இலக்கியங்களின் பெரும்பான்மை பாடுபொருளாக அமைவது நட்புதான். இலக்கியங்கள் மனிதனைச் சார்ந்து வாழும் பெரும்பான்மையான உறவுகளில் நட்பை பற்றி மட்டும் தான் சிறப்பாகவும், ஆழமாகவும் கூறுவதைக கண்ணுறும்போது நட்பின்றி இயங்க முடியாது எனும் உண்மை புலப்படுகிறது. வாழ்வியல் நிலைப்பாட்டில் நட்பானது எத்துணையளவு இன்றியமையாதது என்பதை எடுத்துரைத்து சமூதாயத்திற்கு நட்பு குறித்த புரிதல் ஏற்படுத்தும் முனைப்பில் ஆராய முற்படுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.*

***முக்கியச் சொற்கள்:*** *அறம், நட்பு, இலக்கியம், வாழ்வியல், உறவு, விழுமியங்கள், சமூகம் தமிழிலக்கியம், அற இலக்கியம், பதினெண் கீழ்க்கணக்கு*

## முன்னுரை

குடும்ப உறவுகளைப் போன்றே நட்பும் மனிதர்களின் வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளதை இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. மதிப்புமிக்க விழுமியங்களைக்கொண்ட அறங்களில் நட்பு முக்கிய இடம் பெற்றுள்ளது. மனித வாழ்வியலை எடுத்தியம்பும் இலக்கியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப்பொருள்களில் நட்பு சார்ந்த கூறுகளையும் உள்ளடக்கி யிருப்பதைக் கண்ணுறும்போது தனிமனித வாழ்விற்கும், கூட்டாக வாழும் சமூக வாழ்விற்கும் நட்பு அவசியத் தேவையாக இருந்துள்ளமை புலப்படுகின்றது.

## நட்பு

ஒரு மனிதன் பரந்துபட்ட சமூகத்தளத்தில் பெற்றோர், இல்லறத் துணையர், மக்கள், நட்பு, சுற்றம் எனப் பலரின் துணைகொண்டு தான் தம் வாழ்க்கைப் பாதையைக் கடக்க முடியும். இவர்களுள் உன்னதமானதாகவும், உற்ற துணையாகவும் எல்லோராலும் கொண்டாடப்படும் உறவாக இருப்பது நட்பு எனும் நிலையில் இயங்கும் நண்பர்களே.

சாதி, மதம், இனம், மொழி, ஆண்-பெண், ஏழை-பணக்காரன் என எவ்வித பேதமும் இன்றி அன்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இணையும் சிறந்த பந்தம் நட்பாகும். நட்பானது ஒருவரின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்துக்கொள்வதில் அக்கறை செலுத்துவது மட்டுமின்றி ஒருவரின் உயர்வுக்கும் தாழ்விற்கும் காரணமாக அமைந்து வாழ்வைக் கட்டமைக்கும் அறக்கூறுகளுள் ஒன்றாகவும் செயல்படுகிறது.

## வாழ்வியல் நிலைப்பாட்டில் நட்பு

மனித வாழ்வை முழுமை பெறச் செய்யும் கூறுகளில் காலையில் எழுந்தது முதல் இரவு

உறங்கச் செல்லும் வரையிலும் இன்னின்ன நன்னெறிகளைப் பின்பற்ற வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளன. இவற்றில் அறம், அன்பு, வீரம், காதல், புகழ், கல்வி, விருந்தோம்பல் போன்றவைகளைத் தொடர்ந்து நட்பும் பேசப்பட்டு வருகிறது. "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்பதிலுள்ள நாலடியாரும், திருக்குறளும் மனிதரைச் சார்ந்துள்ள சுற்றம் குறித்தும் பகை குறித்தும் ஒரு அதிகாரம் மட்டுமே தந்துள்ளன. நட்பிற்கு மட்டும் நான்கு அதிகாரங்களை வகுத்துள்ளன. ஏனைய அற இலக்கியங்களும் நட்பின் ஆழத்தைப் போற்றிப் பாடியுள்ளன.

### அ. உயிர் காக்கும் மருந்துகளில் நட்பு:

உடலைப் பேணிக்காத்து உயிர் வாழ்வதற்கு உண்டான உடல் தரும் சுக்கு, மிளகு, திப்பிலியை உள்ளடக்கிய திரிகடுகம் போன்று மனத்தை அறவழியில் செலுத்தி வாழ்வைச் சிறப்பிப்பதில் நட்பிற்கும் குறிப்பிடத்தக்க பண்பு உண்டென்பதைக் காட்டுகிறது திரிகடுகம் பாடல்,

> **"அருந்ததிக் கற்பினார் தோளும் திருந்திய**
> **தொல்குடியில் மாண்டார் தொடர்ச்சியும், சொல்லின்**
> **அரில் அகற்றும் கேள்வியார் நட்பும்- இம்மூன்றும்,**
> **திரிகடுகம் போலும் மருந்து."[1]**

1. நல்ல மனைவி,
2. பழங்குடியில் பிறந்து உயர்வான எண்ணங்களைக் கொண்டோரது நட்பு,
3. நல்ல கேள்வி ஞானம் உடையோரது நட்பு.

இம்மூன்று கூறுகளும் சரியாக அமைவது சுக்கு, மிளகு, திப்பிலி, போன்ற உயிர்காக்கும் மருந்துகளின் தன்மையைப் போன்று வாழ்க்கையை நற்பாதைக்குக் கொண்டு செல்லும் மருந்துகளாகும் என்கிறது. சுக்கு, மிளகு, திப்பிலி என்பது உடல்நோய் போக்கும் மருந்து. மேற்கூறப்பட்ட மூன்று கருத்துகளும் திரிகடுகம் போன்று மனநோயைத் தீர்க்கவல்ல மருந்துகளாகக் கூறுகின்றது. இதில் நட்பையும் குறிப்பிடுவது நட்பின் நிலைப்பாட்டைக் காட்டுகிறது.

### ஆ. நல்லொழுக்கங்களில் நட்பு

உலகிலுள்ள ஒவ்வொரு உயிருக்கும் அதனதன் தன்மைக்கேற்ப ஒழுக்க முறைகள் வரையறுக்கப்படுகின்றன. ஆயினும் அவற்றுள் உயர்திணைக்குரிய மனிதர்களின் ஒழுக்கநெறிகள் தான் பெரிதும் பேசப்படுவதும் போற்றப் படுவதுமாகின்றது.

"நீரின்றி அமையாது உலகம்" என்பது போன்று ஒழுக்கமின்றி இயங்காது மனித இனம். வாய்மை, நன்றி மறவாமை, பெரியோர்களை மதித்தல், பண்பாடுகளைக் கடைப்பிடித்தல், கீழ்ப்படிந்து நடத்தல் என அகம் சார்ந்தும் புறம் சார்ந்தும் பல்வேறு ஒழுக்கநெறிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இவ் ஒழுக்கங்களே மனிதனை மனிதனாக வாழவைத்துச் சமூகம் சிறப்படைவதற்குக் காரணமாக அமைகின்றன.

மனிதனை மதிப்புறச்செய்யும் நல்லொழுக்கங்களில் நட்பையும் வரிசைப்படுத்துகின்றது ஆசாரக்கோவை.

> **"நன்றி அறிதல், பொறையுடமை, இன்சொல்லோடு**
> **இன்னாத எவ்உயிர்க்கும் செய்யாமை, கல்வியோடு**
> **ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை,**
> **நல்இனத் தாரோடு நட்டல் - இவை எட்டும்**
> **சொல்லிய ஆசார வித்து."[2]**

1. பிறர் தனக்குச் செய்த உதவியை மறவாதிருத்தல்,
2. பொறுமையாக இருத்தல்,
3. பேசும் சொற்களில் யார்மனதையும் புண்படுத்தாத இனிய சொற்களைப் பேசுதல்,
4. எந்த உயிருக்கும் இன்னல்களை ஏற்படுத்தாமலிருத்தல்,
5. கல்வி கற்றல்,

6. உலகநடையினையறிந்து செயல்படுதல்,
7. அறிவுடையவராய் இருத்தல் எனும் பண்புகளைத் தொடர்ந்து
8. நற்குணம் மிக்கவருடன் கொள்ளும் நட்பு

என்று எட்டு வகையான பண்புகளுள் நட்பையும் வரிசைப்படுத்தியுள்ளது. ஒரு மனிதன் நல்லொழுக்கம் மிக்கவனாகவும் உலகம் போற்றும் திறன் படைத்தவனாகவும் வாழும் வாழ்வியல் நிலைப்பாட்டில் உறவும் அடிப்படையாக இருந்துள்ளமையால் நட்பின்றி மனிதர்கள் இயங்குவதில்லை எனும் கருத்து இதன்வழி பெறப்படுகிறது.

### இ. நாடாளும் திறன்களில் நட்பு:

எளிமையான மனிதர்களுக்கு மட்டுமின்றி நாடாளும் மன்னனுக்கும் நட்பானது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்துள்ளது. ஏனெனில்,

**நகுதல் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு"[3]**

எனும் வள்ளுவரின் கூற்று போன்று நாடு சார்ந்தும், தம் வாழ்வு சார்ந்தும் எல்லா நேரங்களிலும் தனித்தியங்க முடியாது. அவ்வப்போது தம்மைச் சார்ந்த நலம் விரும்பிகளின் வழிகாட்டுதல் தேவையானதாக உள்ளது.

மகாபாரதம் கூறும் துரியோதனன் - கர்ணன், குசேலோபாக்கியானம் கூறும் கண்ணன் -குசேலன், கம்பராமாயணம் காட்டும் இராமன் -குகன், இராவணன் -வாலி, பெருங்கதை கூறும் உதயணன்-யூகி, புறநானூறு காட்டும் கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையாரர் பொத்தியாரர், அதியமான் - ஔவையார், பாரி - கபிலர், குமணன் -பெருந்தலைச்சாத்தனார், பெருஞ்சேரல் இரும்பாறை-அரிசில்கிழார் என நாடாளும் மன்னர்களின் ஆட்சிமுறையானது நட்பின்றி அமையவில்லை என்பதைக் காட்டுகின்றது.

இரகுபதி மன்னன்-புலவர்களின் நட்பு குறித்துப் பேசும்போது "புலவர்கள் செல்வம் கண்டு போற்றுகிறவர்கள் இல்லை. அரசியல் வெற்றி கண்டு புகழுகின்றவர்கள் இல்லை. மன்னன் வீரம் கண்டு அதிகமாய் போற்றுகிறவர்கள் இல்லை. ஆனால் நீதியுணர்ந்து நட்பு கண்டு வாழ்த்துகின்றவர்கள் ஆவார்கள்"[4]. என்று கூறுகிறார். நட்புடன் நிலைபெற்றிருக்கும் நண்பர்களே மன்னர்கள் நெறி தவறும் இடங்களில் இடித்துரைத்தும், நெருக்கடியான நேரங்களில் வழிகாட்டியும் மன்னர்களது அகவாழ்வும், புறவாழ்வும் செழுமை பெறும்வண்ணம் செயல்பட்டும் வாழ்ந்துள்ளனர். நட்பு பற்றி குருநாதன் "புலவர்களுக்கு மன்னனைத் திருத்தவும், அறநெறிக்குத் திருப்பவும், மக்கள் நன்மை கருதியும் இப்படிப்பட்ட நட்புறவுகள் தேவையே"[5] என்று பகர்ந்துள்ளார். நண்பர்களைத் தவிர வேறுயாரும் மன்னர்களது வாழ்வில் நேரடியாகப் பங்கு பெறுவதாக கருத்துகள் பதிவு செய்யப்படவில்லை.

மன்னர்களும் தம் நண்பர்கள் வறுமை நிலையிலிருந்தாலும், தொலைவிலிருந்தாலும் நேரில் காணாமலிருந்தாலும் அவர்களை மதிப்புடன் நடத்துவதும் தனக்குக் கிடைத்த அரியவற்றையெல்லாம் தன் நண்பர்களுக்குத் தந்து அவர்கள் வாழ்வு செழிப்புறச் செய்துள்ளனர். மன்னரோடு நட்புப் புண்டவர்களும் தோழமைக்குகந்த நண்பர்களுக்காக உருகுவதும், ஆற்றுப்படுத்துவதும், பகைமன்னரிடத்தில் வாதிடுவதும் என எல்லா நிலைகளிலும் தம் நண்பர்களின் நலனுக்கான செயல்களையே செய்துள்ளனர். இதனைத்தான் வள்ளுவர்

**"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு."[6]**

எனும் குறள்வழி கூறியுள்ளார். அரசர்களுள் சிங்கம் போன்ற தன்மையைப் பெற்றிருக்க வேண்டிய மிகமுக்கியக் கூறுகளில் நட்பும் இடம் பெற்றிருக்கிறது. அரசனுக்குரியதாயினும் நாட்டிற்குரியதாயினும் தன்னலம் பாராது

தன்னைச் சார்ந்தவர்களின் நலனையே அடிப்படையாகக்கொண்டு செயல்படுவது நட்பு என்பதை அறியமுடிகிறது.

**"பெரியார்சொல் பேணி, பிறழாது நின்று
பரியா அடியார்ப் பறியான் -கரியார்சொல்
தேறான், இயையான், தெளிந்துஅடிசில்
ஈத்து உண்பான்
மாறான் மண் ஆளுமாம் மற்று."[7]**

வள்ளுவரைப் போன்றே ஏலாதியும் மேற்காணும் பாடலின் வழியாக மண்ணாளும் மன்னன்,

1. **மூத்தோரர் சொல் கேட்டு நடத்தல்,**
2. **அன்பு கொண்டோரை விட்டு விலகாமல் இருத்தல்,**
3. **வஞ்சகர்களின் சொற்களை நம்பாது அவர்களோடு நட்புக்கொள்ளாமல் விலகி இருத்தல்,**
4. **விருந்தினருக்கு உணவு கொடுத்து உண்ணுதல்**

போன்ற பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும் எனப் பட்டியலிடுகிறது. வள்ளுவர் கூறும் மன்னனுக்குரிய நட்பும் ஏலாதி கூறும் நட்பும் வேறுபடுகின்றன. வள்ளுவர் குறிப்பது நல்ல நட்பு, ஏலாதி பகர்வது தன் நண்பர்களால் தனக்கும், மக்களுக்கும் தீங்கு விளைவிக்கும் நண்பனை விலக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. அதாவது தீ நட்பை விட்டொழிக்கச் சொல்கிறது. ஏனெனில் வஞ்சகர்களோடு நட்பு கொண்டால் மன்னன் மட்டுமல்லாது மன்னனைச் சார்ந்துள்ள மக்கள் அனைவருமே பாதிக்கப்படுவர்.

நட்பைச் சிறப்பித்துக் கூறும் நாலடியாரும் திருக்குறளும்கூட நட்பைப் பற்றிக் கூறும்போது நட்பின் சிறப்புகளைப் பற்றிக் கூறுவதோடு மட்டும் நில்லாமல் தீ நட்பு, கூடா நட்பு எனும் அதிகாரங்களைப் பதிவு செய்துள்ளன. ஒரு மனிதருடைய உயர்விற்கும் தாழ்விற்கும் நட்பே அடிப்படையாக அமைந்துள்ளது என்பதில் ஐயமில்லை.

அரசனைத் தொடர்ந்து நாடாளும் இளவசரனுக்குரிய செயல்களைப் பற்றித் திரிகடுகம்,

**"பழமையை நோக்கி, அளித்தல், கிழமையால்,
கேளிர் உவப்பத் தழுவுதல், கேளிராத்,
துன்னிய சொல்லால் இனம்திரட்டல் - இம்மூன்றும்
மன்னர்க் கிளையான் தொழில்"[8]**

தொன்மையான நண்பர்களின் நிலையறிந்து அவர்களுக்கு உதவி அவர்களைக் காப்பாற்றி மேன்மைபடுத்துதல்,

சுற்றத்தார் மகிழும்படி அரவணைத்தல்

நல் இனத்தாரைத் தேடி நட்புக் கொள்ளுதல் எனும் கருத்துகளைக் கூறுகிறது.

நண்பரின் பழமையை நினைத்து அவரின் சூழ்நிலையை அறிந்து அவர் வாழ்வைச் செம்மையாக்கும் செயல்களைச் செய்து காப்பாற்ற வேண்டும் என்றும் நல்லவர்களுடன் நட்பு கொள்ள வேண்டுமெனவும் அறிவுறுத்துகிறது. ஏனெனில் மன்னரைச் சுற்றி எத்துணைபேர் இருந்தாலும் உண்மையான அன்பு கொண்டு சரியான நெறிகளில் வழிநடத்த நண்பர்களைத் தவிர வேறு யாரும் முன்னெடுக்க முடியாது. இதனாலேயே இக்கருத்து அரசர்களுக்கும் அரசனைத் தொடர்ந்து இளவரசருக்கும் கூறப்பட்டிருக்கும் என எண்ண முடிகிறது.

### ஈ. நன்மையளிக்காத செயல்களில் நட்பு

தமக்கு வரும் துன்பத்தைக் கண்டு அஞ்சாது தவறு செய்வோரிடம் நட்பு கொண்டால் அந்நட்பானது தீமையை உருவாக்கித் துன்பத்தை தரும்.

**"நேர்வஞ்சா தாரொடு நட்பும் விருந்தஞ்சும்
ஈர்வளையை இல்லத் திருத்தலும்-சீர்பயவாத்
தன்மையி லாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்தில் இல.''[15]**

இப்பாடல் மனிதர்கள் மேற்கொள்ளும் வினைகளில் தீமையளிக்கும் வினைகளைப் பற்றிக்கூறுகிறது.

**பழிக்கஞ்சாதோரிடம் கொள்ளும் நட்பு**
**விருந்தோம்பலை எதிர்க்கும் மனைவியுடன் வாழ்தல்**
**இழி குணம் படைத்தோர்க்கு அருகில் வாழ்வது**

தீவினைக்கு வித்திடும் குணங்களுள்' தமக்கு வரும் துன்பத்தைக் கண்டு அஞ்சாது தவறு செய்வோரிடம் நட்புக் கொள்ளுதல் என்பதை "நோவஞ்சாதரொடு நட்பு" எனும் அடி மூலம் குறிப்பிடுகின்றது.

இப்பாடலுக்குச் சிறந்த சான்றாக துரியோதனன் கர்ணனின் நட்பை இங்கு எடுத்துக்காட்டலாம்.

### உ. வாழ்வை அழிக்கும் குற்றச்செயல்களில் நட்பு:

குற்றம் என்பது உலகோர் வகுத்த அறநெறிகளுக்கு எதிர்மறையாகத் தெரிந்தே செயல்படுவதாகும். சமுதாயத்திற்கு நன்மையான செயல்களைச் செய்யாவிடினும் அழிவை ஏற்படுத்தும் குற்றச் செயல்களை செய்யாமல் இருக்க வேண்டும்.

ஒருவர் தனக்கும் தன்னைச் சார்ந்தோருக்கும் நன்மையான செயல்களைச் செய்வதாக எண்ணி அடுத்தவர்களின் உயிர் மற்றும் உடைமைகளுக்கு தீங்கிழைப்பது மாபெரும் குற்றமாகும். இத்தன்மையான குற்றங்களனைத்தும் வாழ்வையே அழித்து விடும் ஆற்றல் வாய்ந்தது.

திரிகடுகம் குற்றம் தரும் பகைகளுக்கான இடங்கள் பற்றி,

**"அற்புப் பெருந்தளை யாப்பு நெகிழ்ந்தொழிதல்**
**கற்புப் பெரும்புனை காதலின் கைவிடுதல்**
**நட்பின் நயநீர்மை நீங்கல் இவைமூன்றும்**
**குற்றம் தரூஉம் பகை."[16]**

எனும் பாடல் வழி விளக்குகிறது.

**"பிற உயிர்களிடத்தில் அன்பற்று இருப்பது**
**"பொருள் ஈட்ட வேண்டுமென்ற வேட்கையறால் கல்வி கற்க விரும்பாமை**
**"ஒருவரிடம் கொண்ட நட்பிற்காக நீதி நெறிகளின்று விலகுதல்**

போன்ற பண்புகள் குற்றத்தை உருவாக்கும் பகைகளாம். இப்பண்புகள் மிகுந்திருந்தால் வாழ்வையே அழித்து விடும்.

இவற்றில் "நட்பின் நயநீர்மை நீங்கா" எனும் தொடரானது ஒருவர் மீது கொண்ட மனமொத்த நட்பிற்காக உலகம் போற்றும் நன்னெறிகளின்று விலகி அறத்திற்கு புறம்பான செயல்களைச் செய்தால் அது மிகப்பெரிய குற்றத்தை உருவாக்கும் பகையாக மாறி அழிவுக்கு வித்திடும் என்கிறது.

### முடிவுரை

நல்ல நண்பர்களின் உறவென்பது வாழ்க்கைக்கு அழகு. ஒருவரின் வாழ்க்கையில் நிகழும் நன்மை தீமைகளைத் தீர்மானிப்பதில் எல்லா உறவுகளைக் காட்டிலும் நட்பே பெரும் பங்கு வகிக்கிறது. இலக்கியங்கள் வாழ்வியல் நிலைப்பாடுகளில் நட்பின்றி இயங்கவியலாது என்ற கோட்பாட்டை முன்னிறுத்திநட்பு உலகியலோடு கலந்தது என்பதையும் உணர்த்துகிறது. பாவ புண்ணியங்களை நிர்ணயிக்கும் தக்க, தகாத செயல்களில் நட்பும் ஒரு காரணியாக நின்று தனிமனிதனுக்கு மட்டுமல்லாமல் ஒட்டு மொத்த சமூகத்திற்கான நல்வினை, தீவினைகளை உருவாக்குகிறது.

### குறிப்புகள்

1. சுப்பிரமணியன். ச.வே. (உ.ஆ), 2012. திரிகடுகம் ப.எ-01. பதினெண் கீழ்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும். மணிவாசகர் பதிப்பகம்.
2. மேலது, ஆசாரக்கோவை, ப.எ- 01.
3. வரதராசனார். மு. (1959). திருக்குறள் தெளிவுரை. குறள்-784, கழக வெளியீடு.

4. இரகுபதி. *இலக்கிய வானில் பக்தி மலர்கள்* ப.எ-140
5. குருநாதன். *புறநானூறு - ஒரு பார்வை.* ப.எண்-140
6. வரதராசனார். மு. (1959). *திருக்குறள் தெளிவுரை.* குறள்- 381, கழக வெளியீடு.
7. சுப்பிரமணியன். ச.வே. (உ.ஆ), (2012). *ஏலாதி* - பா.எண்-47, *பதினெண் கீழ்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும்.* மணிவாசகர் பதிப்பகம்.
8. மேலது, *திரிகடுகம்.* பா. எண்-58,.
9. வரதராசனார். மு. (1959). *திருக்குறள் தெளிவுரை.* குறள்-786, கழக வெளியீடு.
10. சுப்பிரமணியன். ச.வே. (உ.ஆ), (2012). ஆசாரக்கோவை, ப.எ- 54, பதினெண் கீழ் கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும். மணிவாசகர் பதிப்பகம்.
11. மேலது, *திரிகடுகம்,* பா.எண்-64:1,
12. மேலது, *ஏலாதி*-33:2
13. அகளங்கன், கொன்றை வேந்தன். (1996). பா.எ-47, இந்து மாமன்றம்-வவுனியா,
14. சங்குப்புலவர். தி. (உ.ஆ), (1965). குசேலோபாக்கியானம் இபா. எ-624, திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
15. சுப்பிரமணியன். ச.வே. (உ.ஆ), (2012). திரிகடுகம் பா.எ-63, *பதினெண் கீழ்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும்.* மணிவாசகர் பதிப்பகம்.
16. மேலது, பா. எ - 86.
17. மாணிக்கம், அ. (உ.ஆ), (1987). *வில்லிபாரதம்* - பதினேழாம் சருக்கம் பா.எ - 240, வர்த்தமானன் பதிப்பகம்.